இயக்குநர்(பொ), மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை-42
அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு. K. செந்தில்வேல், B.E.,

செ.மு.ஆ.எண்.அ2 / 10433 / 2017-6 நாள் : 19.02.2020

பொருள் : பணியமைப்பு - மோட்டார் வாகன பராமரிப்புத் துறை - அரசு தானியங்கி பணிமனை, வேலூர் - திரு. C.R. முருகன், இளநிலை உதவியாளர் - அடிப்படை பணியிலிருந்து பணிமாற்றம் மூலம் இளநிலை உதவியாளராக முறையாக பதவி உயர்வு வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் பதவியில் அன்னாரது பணிக்காலத்தை முறைப்படுத்தி ஆணைகள் வழங்கல்.

பார்வை : 1) இயக்குநரது செ.மு.ஆணை எண். அ2/ 10433/ 2017 நாள் 19.03.2018
2) தானியங்கி பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, வேலூர் அவர்களது கடித எண்.அ1 / 681 / 2017-3 நாள் 23.03.2018

-------

பார்வை 1ல் காணும் இயக்குநரது செயல்முறைகள் வாயிலாக அடிப்படை பணியிலிருந்து பணிமாற்றம் மூலம் திரு. C.R. முருகன், இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு இத்துறையின் வேலூர், அரசு தானியங்கி பணிமனையில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிபுரிய ஆணைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அன்னார் வேலூர், அரசு தானியங்கி பணிமனையில் 23.03.2018 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

பார்வை 2ல் காணும் வேலூர், அரசு தானியங்கி பணிமனை, தானியங்கி பொறியாளர் அவர்களது கடிதத்தைத் தொடர்ந்தும் திரு. C.R. முருகன், இளநிலை உதவியாளர் பதவிக்குண்டான விதிகளின் தேவைகளை பெற்றுள்ளதாலும் அன்னாரது பணிக்காலம் இளநிலை உதவியாளர் பதவியில் அன்னார் அப்பதவியில் சேர்ந்த நாளான 23.03.2018 முற்பகல் முதல் முறைப்படுத்தப்பட்டு அந்நாள் முதல் அவர் இரண்டாண்டு அலுவல் காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் இருப்பார் என்றும் அவ்வாறான தகுதிகாண் பருவ காலத்தை அன்னார் முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(ஒம்/-) கொ. செந்தில்வேல்
இயக்குநர்(பொ)

பெறுநர்
திரு. C.R. முருகன், இளநிலை உதவியாளர், அரசு தானியங்கி பணிமனை, வேலூர்
(உரிய வழிமுறையாக)

நகல்
தானியங்கி பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, வேலூர்
மண்டலத் துணை இயக்குநர், சேலம்
அ2 இ.கோப்பு

/ஆணைப்படி/

துணை இயக்குநர்(நி)(பொ)

ET 3744/3002 IN
20/2/2020

தானியங்கி பொறியாளர்,
அரசு தானியங்கி பணிமனை,
வேலூர் - 632 013.